2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

4. தேனி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் வசதியுடன்கூடிய புதிய பால் பண்ணை 58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

5. அதிகரித்து வரும் தயிர், மோர், லஸ்ஸி, பன்னீர் போன்ற பால் உப பொருட்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், திருவண்ணாமலை, மாதவரம், சோழிங்கநல்லூர் மற்றும் அம்பத்தூரில் உள்ள பால் பண்ணைகளில் பால் உபபொருட்கள் தயாரிப்பதற்குத் தேவையான உபகரணங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை மேம்படுத்த 119.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) கொரோனா வைரஸ் நோயைக் கட்டுப்படுத்த மாநில அளவிலான தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனைகளை அறிவித்தல், ஆம்புலன்ஸ் சேவையை வலுப்படுத்த புதிய '108' அவசர கால ஊர்திகள் வாங்குதல், Robotic அறுவை சிகிச்சை மையம் நிறுவுதல், வான்வழி அவசர கால சேவை தொடங்குதல் உள்ளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறையில் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கொரோனா வைரஸ் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், சார்ஸ் போன்ற தொற்று நோய்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மாநில அளவிலான தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனையாக, தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையும், மூன்று மண்டல அளவிலான தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனைகளாக, மதுரை மாவட்டம், தோப்பூரில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனையும், கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு காசநோய் சானடோரியம் ஆகிய மருத்துவமனைகளை மேம்படுத்துவதற்கும், சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

நிலையத்திலுள்ள ஆய்வகத்தை Bio Safety Level–III நிலைக்கு மேம்படுத்துவதற்கும் 110 கோடி ரூபாய் செலவிடப்படும்.

2. பொது மக்களுக்கு அவசர காலங்களில் உயிர் காப்பதில் சிறப்பாக சேவை செய்து வரும் 108 அவசர கால ஆம்புலன்ஸ் சேவையை மேலும் வலுப்படுத்துவதற்காக, நடப்பாண்டில் 500 புதிய அவசர கால ஊர்திகள் 125 கோடி ரூபாய் செலவில் வாங்கி, வழங்கப்படும்.

3. கிராமப்புற வளரிளம் பெண்களுக்கிடையே தன் சுத்தத்தை ஊக்குவிக்க மாதவிடாய் கால தன் சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் 37.47 கோடி ரூபாய் செலவில் நகர்ப்புறத்தில் பயிலும் பள்ளி மாணவியர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். மேலும், அனைத்து அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளியாக சிகிச்சை பெறும் பெண்களுக்கும் சானிடரி நாப்கின் வழங்கப்படும்.

4. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் கடினமான அறுவை சிகிச்சைகளை துல்லியமாகவும், விரைவாகவும், உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிறப்பான சிகிச்சை அளிக்கவும் நவீன Robotic அறுவை சிகிச்சை மையம் 34.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

5. ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை உடனடி சிகிச்சை மேற்கொள்ள துரிதமாக மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்காக வான்வழி அவசர கால சேவை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

6. புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள இராணிப்பேட்டை வருவாய் மாவட்டத்திற்கு, புதிய சுகாதார மாவட்டம் 3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.